



பூமாதேவி ஸமேத ஸ்ரீ வராஹப் பெருமாள்

கர்நாடகத்தில் மாண்டியா மாவட்டத்தில் உள்ள ஓர் அழகிய கிராமம்தான் கலஹள்ளி. இதனை வராஹநாதன கலஹள்ளி என்றும் கூறுவர். இது பூகனன்கரா அருகில் உள்ளது. இன்று இந்த பூகனன்கரா, கர்நாடகத்தின் சரித்திரத்தில் ஒரு முக்கிய இடமாக ஆகிவிட்டது. ஆம். இதுதான் இன்றைய கர்நாடக முதல் அமைச்சரான திரு. பி.எஸ். எடியூரப்பாவின் சொந்த ஊர். அவர் முழுப் பெயர் பூகனன்கரா சித்தலிங்கைய எடியூரப்பா. நான் இப்போது இந்த கலஹள்ளி நோக்கிப் பயணம் செய்யப் போகிறேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து கொள்ளுங்கள். பூமியைக் காத்த வராஹப் பெருமாள் இன்று காப்பதற்கு மனிதர்கள் இன்றி இருக்கிறார். என்னுடைய வேண்டுகோள் இனி வரும் சந்ததியினர் இதுபோன்ற புராதனமான கோயில்களை, நம் முன்னோர் பாடுபட்டுக் கட்டிய தலங்களைப் பேணிக் காக்க வேண்டுமென்பதே. அந்த நாளில் எந்தவித வசதிகளும் இன்றி எப்படித்தான் இது போன்ற கோயில்களைக் கட்டினார்களோ என்று வியப்பாக இருக்கிறது. தரிசனத்திற்காக இல்லாவிட்டாலும் உல்லாசப் பயணமாக இந்த இடத்திற்கு வாருங்கள். அருகில் ஜைனர்களின் சில கைவண்ணங்களையும், கோமேதகர் சிலையையும் காணலாம்.

# கிரஹ தோஷங்கள் நீக்கிடும் கலஹள்ளி வராஹர்!

மேலும் கிருஷ்ணராஜசாகர் அணையைக் கட்டும் போது நீரில் மூழ்கிப் போன வேணுகோபால ஸ்வாமியின் திருக்கோயிலைச் சமீபத்தில் கோடேஸ் நிறுவனத்தினர் ஒவ்வொரு கல்லையும் நீரிலிருந்து தேடிக் கண்டுபிடித்து கொணர்ந்து மீண்டும் அருகில் புதிதாக, பழையபடியே கட்டியிருக்கிறார்கள். இந்தக் கோடேஸ் நிறுவனம் இது போன்ற பல நல்ல சமூகப் பணிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமா? இங்குள்ள கிருஷ்ணராஜசாகர் அணை, பிருந்தாவன் மலர்த்தோட்டம் ஆகியவற்றையும் கண்டு களிக்கலாம்.

## பெங்களூரிலிருந்து ஸ்ரீதர்

மைசூர் நகரத்திலிருந்து 50 கி.மீ. தொலைவில் மாண்டியா மாவட்டத்தில், கிருஷ்ணராஜபெட் தாலுக்காவில் ஹேமாவதி நதிக்கரையில் அமைந்திருப்பது கலஹள்ளி. இதற்கு ரயில் நிலையம் கிருஷ்ணராஜ சாகர். கிருஷ்ணராஜ சாகர் அணைக்கு வடபுறம் ஆற்றுப் படுகையை ஒட்டிச் செல்லும் சாலையில் சென்று வராகநாதன கலஹள்ளி கிராமத்தை அடையலாம். கிராமத்திலிருந்து சுமார் 2.5 கி.மீ. தொலைவிலுள்ளது கோயில்.

இந்தக் கோயிலைப் பற்றி நான் அறிந்து கொண்டதே ஒரு சுவையான நிகழ்ச்சி. 2005ஆம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்து வந்திருந்த என் உடன்பிறவாச் சகோதரன் ஹர்ஷ் பாலசுப்ரமணியனும் நானும் மேல்நாடு எனப்படும் கர்நாடகத்தில் உள்ள பல வைணவக் கோயில்களைக் காணப் புறப்பட்டோம். ஒருநாள் மாலை நாங்கள் மைசூரில் உள்ள வைணவ மடமான பரகால மடத்திற்குச் சென்று அந்த ஜீயரைத் தரிசித்துவிட்டு "நாங்கள் 'கோபுர தரிசனம்' பத்திரிகையிலிருந்து வருகிறோம். சுற்று வட்டாரத்தில் உள்ள வைணவக் கோயில்களைத் தரிசித்து அவற்றைப் பற்றிய விவரங்களைக் கோபுர தரிசனத்தில் எழுதி



பூமாதேவி ஸமேத ஸ்ரீ வராஹப் பெருமாள்

வருகிறோம்" என்பதைப் பற்றியும் தெரிவித்தேன். பிறகு என் வெப்சைட்டான www.karnatakavaishnavatemples.net பற்றியும் தெரிவித்தேன். இவற்றையெல்லாம் மிக கவனத்துடன் கேட்ட ஸ்வாமிகள், உடனே என்னிடம் கலஹள்ளி வராகப் பெருமாள் கோயிலைப் பற்றிக் கூறி, அதற்குச் செல்லும் வழியையும் தோராயமாகச் சொல்லி எங்களை ஆசீர்வதித்து அனுப்பினார். அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நாங்கள், எனக்கும் ஹர்ஷ்க்கும் பஞ்ச சம்ஸ்காரம் செய்து வைத்த எங்கள் ஆச்சார்யன் H.H. ரங்கப்ரியா ஸ்வாமிகளின் அவதார ஸ்தலமான ஹெடதலே சென்று தரிசித்தோம்.

மறுநாள் காலை 10 மணிக்கு மைசூரை விட்டுப் புறப்பட்டு கலஹள்ளி நோக்கிப் பயணமானோம். பாண்டவபுரா, சின்னகுர்லி, பூக்கனன்கரே, கஞ்சேகரே வழியாக கலஹள்ளியைச் சென்றடைந்தோம். எங்கள் நல்ல நேரம், அர்ச்சகர் திரு. விஜயபட்டர் அங்கு இருந்தார். அவர் சாதாரணமாகக் காலை 10 மணிக்கு வந்து விட்டு நாள் முழுவதும் கோயிலிலேயே இருந்து, மாலை 6 மணிக்குத்தான் திரும்புவாராம். அவர் வசிப்பது பூக்கனன்கரேயில்தான். ஆனால் எங்களுக்குப் போதிய தகவல்கள் கிடைக்கவில்லை.

இரண்டாவது முறை நான் இந்த கலஹள்ளிக்கு வந்ததிலும் ஒரு சுவாரஸ்யமான தகவல் உள்ளது. நான் பரகால மடத்து ஸ்வாமிகளை மீண்டும் தொடர்பு கொள்ள முயற்சி செய்தேன், கிடைக்கவில்லை. அரும்பாடுபட்டு அந்த மடத்து மேனேஜரைத் தொடர்பு கொண்டேன். அவர் தனக்கு அதிக விவரங்கள் தெரியாது என்று கூறி பெங்களூரிலுள்ள திரு. வேங்கடராமய்யாவின் விலாசம் தந்தார். நானும் அவரைத் தொடர்பு கொண்டேன். அவர் அந்தக் கோயிலுடன் அதிகத் தொடர்பு உள்ள பேராசிரியர் திரு. இ.எஸ். துவாரக தாஸா என்பவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் வராஹ ஜயந்தி தினத்திற்கு கலஹள்ளி செல்ல இருப்பதாகக் கூறினார். இவர் இந்தக் கோயிலை முன்பு போல் பிரசித்தமாக்கப் பாடுபட்டு வரும் ஒரு வைணவர். இவர் என்னுடைய 'ஈ' குருப் அங்கத்தினர். மேலும் என் தந்தையின் நண்பர் என்பதையும் அவருடன் பேசிய போது அறிந்து கொண்டேன். திரு. வேங்கடராமய்யாவும் இந்த கலஹள்ளியைச் சேர்ந்த மத்வ மதத்தைச் சேர்ந்த பிராமணர். இவரும் இந்தக் கோயிலை உலக மக்கள் அறியச் செய்யப் பாடுபட்டு வருகிறார். அவர் இந்தக் கோயிலைப் பற்றி அரிய பல ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார். இக்கோயில் பரகால மடத்திற்கும், மூஸ்ராய் பிரிவினருக்கும் அளிக்கப்பட்டு விட்ட குறிப்பேட்டைக் கண்டார். வழக்கம் போல் மூஸ்ராய் இந்தக் கோயிலுக்கு எதுவும் செய்யவில்லை. காரணம் போதிய நிதியுதவி கிடைக்காததே. வேங்கடராமையா சொன்னார். அபிஷேகம், பூஜை எதுவும் நடைபெறாததால், நாளடைவில் இந்தக் கோயில் பழுதுபட்டு பெருமாள் சிலை மீது பாசி படர்ந்து கிடந்தது. பிறகு அவர் பரகால மடத்திற்குப் பலமுறை சென்று ஸ்வாமிகளிடம் இந்தக் கோயிலின் நிலையை எடுத்துக் கூறியிருக்கிறார். அவருடைய முயற்சி வீண்போகவில்லை. ஒருநாள் மாலை பரகால மட ஸ்வாமிகள் இந்தக் கோயிலுக்குச் சென்றார். பெருமாளைக் கண்டு கண்ணீர் வடித்தார். அன்றுமுதல் பரகால மடம் இந்தக் கோயிலின் நிர்வாகத்தை ஏற்றது. ஒரு முழுநேர அர்ச்சகருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிறகு தை மாதம் ரேவதி நக்ஷத்திரத்தில் வரும் வராஹ ஜயந்தியன்று பேராசிரியர் திரு. இ.எஸ். துவாரக தாஸாவுடன் சென்று எம்பெருமான் வராஹரைத் தரிசிக்கும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. திரு. வேங்கட்ராமையா மூலம் கிடைத்த தகவல்கள் இதோ :

இந்த வராஹ மூர்த்தி கண்வ மகரிஷியின் "சம்புட மூர்த்தி"யாக இருந்தவராம். சம்புடம் என்றால் பனை ஓலையால் செய்யப்பட்ட பெட்டி. இதில் அந்த எம்பெருமானை வைத்து அவர் செல்லும் இடத்திற்கெல்லாம் எடுத்துச் செல்வாராம். அவருடைய ஆசிரமம் கூட இந்த இடத்திற்கு அருகில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்று இந்த மூர்த்தி

## சமூகத்திற்கு சேவை செய்ய சிறந்த வழி!

"ஒரு கருவி ஒழுங்காக இருந்தால்தான் அதை முழுமையாகப் பயன்படுத்த முடியும். உங்கள் நிலையும் அப்படித்தான். சுற்றுப்புறம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அதனால் பாதிக்கப்படாமல், நீங்கள் உள்ளுக்குள் அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருக்க முடிந்தால் தான், உங்களால் மற்றவர்க்கு சேவை செய்ய முடியும்.

சமூகத்தை கவனிக்கப் போகும்முன், உங்களை முதலில் கவனியுங்கள்.

அமைதியையும், ஆனந்தத்தையும் நீங்கள் அனுபவித்து உணர்ந்தால், நீங்கள்தான் சமூகத்திற்குக் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த பரிசு. அப்புறம், உங்கள் திறமைக்கேற்றபடி, உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்குத் தேவையானதை மகிழ்ச்சியுடன் செய்யத் துவங்கி விடுவீர்கள்."

**- சத்குரு ஜக்கி வாசுதேவ்**

25 அடி உயரம். பூமாதேவியைத் தம் இடப்பக்கத் தொடையில் அமர்த்திக் கொண்டு தம் மேல் வலக் கரத்தில் சக்கரமும், இடக் கரத்தில் சங்கும் கீழ் வலக் கரம் அபய முத்திரையுடனும், இடக்கரம் ஆறடி உயரமுள்ள தாயாரை அணைத்தவாறும் மிக அற்புதமாக சேவை சாதிக்கிறார். இவரின் முதுகில் ஒரு சுதர்ஸன சக்கர முத்திரை காணப்படுகிறது. வராஹப் பெருமாளுக்கு சில குறிப்பிட்ட தலங்களிலேயே கோயில்கள் உண்டு. அவை தமிழ்நாட்டில் ஸ்ரீமுஷ்ணம், மகாபலிபுரத்திற்கு அருகில் திருவிடந்தை. ஆந்திரப் பிரதேசத்தில் சிம்ஹாசலம், திருப்பதி ஆகியவை. கர்நாடகத்தில் மைசூர் சமஸ்தானத்திலுள்ள ஸ்வேத வராஹர் கோயில் மற்றும் இந்தக் கலஹள்ளியில் உயர்ந்து காணப்படுபவருமான ப்ரளய வராஹரும் ஆவர்.

கிருஷ்ணராஜ சாகர் அணை கட்டப்பட்ட போது சுற்று வட்டாரத்திலுள்ள 24 கிராமங்கள் நீரில் மூழ்கிப் போயின. ஆனால் இந்த வராஹ ஸ்வாமியின் மகிமையினால் இந்தக் கிராமமும் கோயிலும் தப்பின. இந்தக் கோயில் ஓர் உயர்ந்த குன்றின் மீது அமைந்துள்ளது. காவிரி, ஹேமாவதி மற்றும் லக்ஷ்மண தீர்த்தா என்ற மூன்று நதிகள் இதைச் சுற்றி ஓடுகின்றன. சுற்றிலும் பச்சைப் பசேலென்று வயல்கள் காண்பதற்கு மிக அருமையாக இருக்கிறது. ஆனால் இந்த ப்ரளய வராஹர் உயர்ந்தவராகக் காணப்படும் அளவிற்கு இவர் புகழ் இன்னும் உயரவில்லை.

இந்த இடங்களை முதலில் தலக்காடு கங்கா வம்சத்தினர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பிறகு ஹோய்சள, விஜயநகர மேலும் வாடியார் அரசாங்கங்களுக்கு உட்பட்டு விளங்கியது. இந்தக் கிராமத்தில் காணப்படும் ஒரே ஒரு கல்வெட்டு, கோயிலுக்கு அருகில் காணப்படுகிறது. இதில் சக ஆண்டு 1257 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, இது ஹோய்சள மன்னன் மூன்றாம் வீரபல்லாள காலத்தைக் குறிப்பிடுகிறது. மேலும், இந்த கலஹள்ளி கிராமம், அக்ரஹாரமாக மாற்றப்பட்டு ராணி தேவலாதேவியின் பெயரால் தேவலாபுரம் என்றும் மாற்றப்பட்டதாகக் காணப்படுகிறது. குன்றின் மீது அமைந்துள்ள இந்தக் கோயிலுக்குச் செல்லச் சில படிகள் உண்டு. முதலில் இருந்ததை விட பல மாற்றங்களுடன் இந்தக் கோயில் காணப்படுகிறது.

கோயிலைச் சுற்றி ஒரு மதிற்சுவர், ஹேமாவதி ஆற்றின் வெள்ளத்திலிருந்து காக்கும் தடுப்புச் சுவராக அமைந்துள்ளது. இந்தக் கோயில் கர்ப்பக் கிரகம், அந்தர்துவாரம், நவரங்கா ஆகியவற்றுடன் காணப்படுகிறது. மூலமூர்த்தி பூதேவியுடன் சேர்த்து 25 அடி உயரம் காணப்படுகிறார். பெருமாள் சுகாசனத்தில் அமர்ந்திருக்க தாயார் அவர் இடப்பக்க மடியில் அமர்ந்த கோலத்தில் தாமரை மலரை இடக்கையில் ஏந்திக்கொண்டு அருள்பாலிக்கிறார். அவ்வளது வலக்கரம் பெருமாளின் இடையை அணைத்தபடி இருக்கிறது. பெருமாள் கிரீட மகுடத்துடனும் தாயார் கரண்ட மகுடத்துடனும் மிக மிக அழகாகக் காணப்படுகின்றனர்.

இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தினால் வரும் நாள்களில் இந்தக் கோயில் மிகப் பிரபலமடையும் என்று எண்ணுகிறேன். திருமணமாகாதவர்கள் திருமணம் வேண்டி இந்தத் தாயாரைத் தரிசிக்க வருகிறார்கள். அவர்களுக்கு விரைவில் திருமணமும் நடப்பதாகக் கூறப்படுகிறது. அதுபோன்றே கிரஹ தோஷமுள்ளவர்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து பெருமாளையும் தாயாரையும் தரிசிக்க அவர்கள் கிரஹ தோஷம் நீங்கப் பெறுவதால் வாராவாரம் மக்கள் அதிகமாக இந்தக் கோயிலுக்கு வரத் தொடங்கியிருக்கின்றனர். இவ்வளவு சக்தி வாய்ந்த பெருமாளையும், தாயாரை யும் நீங்களும் வந்து தரிசியுங்கள்.

தமிழாக்கம் : **பொய்கையடியான்** ✳